**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.118/2018</u>**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 07–ம் நாளன்று 20 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.69–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **கார்த்திகேயன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**<u>விசாரணை ஆரம்பிக்கும் நேரம் : 5.25 P.M</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இவ்வழக்கில் 20 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 20 வது பிரதிவாதியின் மகன் கார்த்திகேயன் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.345 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20 வது பிரதிவாதி திலகவதி ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.346 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.09.2008 தேதியிட்ட திலகவதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6213/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.347 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 06.02.2026 தேதியிட்ட 20 வது பிரதிவாதி திலகவதி பெயரிலான

வில்லங்கசான்றிதழ் ஆனைலைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.348 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**) கடந்த 06.02.2026 தேதியிட்ட பிரதிவாதி திலகவதி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.349 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2026 தேதியிட்ட Google Map ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.350 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18 முதல் 31, 33 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 53, 55 முதல் 64, 67 முதல் 72, 74 முதல் 100, 102 முதல் 107, 109, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் 20 பிரதிவாதியின் சார்பாக சாட்சியம் அளிக்க சட்டபப்படி உரிமையும் அருகதையும் இல்லை என்று சொன்னல் சரியல்ல. உங்கள் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி பதிவு செய்யப்பட்ட இந்து கொங்கு வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்த பயிரன் குளத்தின் ஸ்ரீஆனூர் அம்மன் பயிர குல தெய்வ கல்வி சமய சமூக நல அறக்கட்டளையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.தேவசேனாபதி, திரு.சாமியப்பன், திரு.செந்தில்நாதன் ஆகிய மூவரும் இந்து சமய அறநிலையத்துறையின் பரம்பரை சமய அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ளதால்

வழக்கு வாதிகளின் சார்பாக வழக்கு நடத்த மேற்சொன்ன 3 பேருக்கும் சட்டப்படி உரிமை உண்டு என்று சொன்னால் அவர்களுக்கு சம்மந்தம் இல்லை. இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையரால் வெளியிடப்பட்ட நிர்வாகத்திட்ட வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லியுள்ள படி திரு.தேவசேனாபதி, திரு.சாமியப்பன், திரு.செந்தில்நாதன் ஆகியோருக்கு வழக்கு சொத்துக்களை பாதுகாக்க வழிநடத்த வழக்கு நடத்த உரிமை உண்டு என்று சொன்னால் இல்லை. பி.வா.சா.ஆ.347 கிரையப்பத்திரத்தை எழுதிக்கொடுக்க அதன் கிரையதாரருக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் கிரையதாரரின் முன் பாத்திய பத்திரங்களே சட்டப்படி செல்லாததால் அதன்படி உங்கள் தாயார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும் அது வாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் கட்டுப்படுத்தும் சார்பதிவாளர் ஆவணத்தினை பதிவு செய்து கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.347 ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்ட பி.வா.சா.ஆ.349 கூட்டுப்பட்டா சட்டப்படி செல்லாது என்று சொன்னால் செல்லும் அரசு வழங்கிய வருவாய் ஆவணங்கள் தான் அது. வழக்குரையில் வாதிகளுக்காக கையொப்பம் செய்துள்ள நபருக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு வாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களில் கண்டுள்ள பல கிரைய ஆவணங்களில் இந்து அறநிலையத்துறையும், மேலும் வாதி கோவில் ஒரு

தரப்பினராக இல்லாததால் அந்த கிரையங்கள் வாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு பிரதிவாதிகள் கிரையம் கொடுத்ததும் தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் கிரையம் பெற்றதும் வாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. இனாம்செட்டில்மெண்ட் தாசில்தார் வாதி கோவில்களுக்கு அறிவிப்பு அனுப்பாததாலும் இனாம் தாசில்தார் போட்ட உத்தரவுகள் வாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தாரிடம் பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்து வாதி கோவிலுக்கு தெரியாமல் பட்டாக்கள் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தார் கொடுத்த பட்டாக்களும் வருவாய்துறை ஆவணங்களும் வாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.585/2008 நலாயினி தாக்கல் செய்த வழக்கில் நீங்களோ உங்கள் தாயாரோ ஒரு தரப்பினராக உள்ளீர்களா என்றால் என் தாயார் தரப்பினர் இல்லை அந்த வழக்கை பற்றி விவரம் தெரியும். மேற்சொன்ன வழக்கில் வாதிகள் கோவில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் தாயாருக்கும் எந்த பூர்வீகமாக எந்த சொத்துக்களும் இல்லை. தும்பிவாடி கிராமத்திற்கும் திருப்பூருக்கும் இடையே 82 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். ஆகையால் வழக்குச்சொத்துக்கள் வாதி கோவிலுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று உங்கள் தாயாருக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தால் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும்படி கூறியபோதும் சாட்சி

தொடர்ந்து கூறியதால் பின்வரும் பதில் கூறவேண்டும் என்று சாட்சி கூறியதால் அதை பின்வருமாறு கூறுகிறார். என் தாயார் வாங்குவதற்கு முன்பாக ரவிச்சந்திரன் சாரிடம் நானும், மணிகண்டசாமி ஆகிய மூன்று பேரும் சென்று திருச்சியில் கண்ணன் என்ற வழக்கறிஞரை சந்தித்து அவருடைய கருத்துரை பெற்று அதன்பிறகு மணிகண்டன் சார் கருத்துரை கொடுத்தார். மேலும் அனைத்து விவரங்களும் சரியாக இருந்ததால் கிரைய ஆவணத்தை பதிவு செய்தோம். நான் பி.எஸ்.சி வரை படித்துள்ளேன். உங்கள் தாயார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் இதற்கு முன்னால் சாட்சியாகிய நீர் தாமாக கூறிய விவரங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன சாட்சியாகிய நீர் தாமாக கூறிய விவரங்கள் உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை. திரு.மணிகண்டசாமி மற்றும் திரு.கண்ணன், வழக்கறிஞர்கள் ஆகியோரை அவமானப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிர்வழக்குரையிலும் பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லாத சங்கதிகளை கூறி பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் நான் பொய் சொல்லவில்லை. இவ்வழக்கிற்கும் அ.வ.எண்.585/2008 வழக்கினை தாக்கல் செய்த நலாயிணிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள ஆவண எண்கள் 1966/1967, 1338/1870, 1511/1973, 410/1974, 763/1976, 1238/1980, 1428/1983, 2361/1993 மற்றும் 7547/2007 ஆகிய ஆவணங்களில் வாதிகள் கோவில் ஒரு தரப்பினராக இல்லை என்பதால் மேற்கூறிய கிரைய

ஆவணங்களை பொறுத்து சட்டப்படியான கடப்பாடு இல்லை என்று சொன்னால்எனக்கு எவ்வாறு பதில் சொல்வது என்று தெரியவில்லை. 1966 முதல் 2007 வரை யுள்ள காலகட்டங்களில் வழங்கப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் வாதிகள் கோவில்கள் ஒரு தரப்பினர் இல்லாததால் அந்த ஆவணங்கள் வாதிகள் கோவில்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் செல்லும். வழக்கு கோவில்கள் கொங்கு வெள்ளாளர் பயிரன் குல சமூகத்தை சேர்ந்தவர்களுக்காக குல தெய்வம் என்று சொன்னால் இல்லை. கொங்கு வெள்ளாளர் சமூதாயத்தை சேர்ந்தவர்களுக்கு பலமரத்துப்பட்டியில் உள்ள ஆனூர் அம்மன், நத்தக்காடையூரில் உள்ள ஆனூர் அம்மன், திருப்பூர் வேலம்பாளையத்தில் உள்ள ஆனூர் அம்மன், பல்லடம் மெட்டுவாவி அருகில் உள்ள ஆனூர் அம்மன் ஆகியவை தான் குல தெய்வம் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தெய்வங்களான ஆனூர் அம்மன், ஜெயங்கொண்டம்மன் டிரஸ்டுக்களுக்கு சம்மந்தம் இல்லை என்று நீங்கள் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சர்வே எண்ணில் உள்ளதாக சொல்லப்படும் சாலைகள் உள்ளூர் பஞ்சாயத்திற்கு ஒப்படைக்கப்பட்டள்ளது என்று நீங்கள் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. கொங்கு வெள்ளாளர் பயிரன் குல சமூகத்தை சேர்ந்தவர்களை தவிர மற்ற வேறு எந்த சமூதாயம், சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு வாதிகள் கோவிலில் எந்த சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் அது தவறு. இந்து சமய அறநிலையத்துறை கொடுத்துள்ள ஒப்புதலின் அடிப்படையில் தான் வாதிகள்

தெய்வங்களுக்கு சார்பாக வழக்காடி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கானது செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**விசாரணை முடிவடையும் நேரம் : 6.00 P.M**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:06:51 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 07–ம் நாளன்று 20வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.70–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: ராமலிங்கம்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**விசாரணை ஆரம்பிக்கும் நேரம் : 6.00 P.M**

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். பி.வா.சா.70 ராமலிங்கத்தின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.351 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 6, 8 முதல் 15, 18 முதல் 31, 33 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 53, 55 முதல் 64, 67 முதல் 72, 74 முதல் 100, 102 முதல் 107, 109, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை. 20வது பிரதிவாதி திலகவதி அழைத்ததின் பேரில் இன்று நான்

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள இ.ம.எண்.101/2026 –ல் நீங்கள்தான் அதில் 15 வது மனுதாரர் ராமலிங்கம் என்று சொன்னால் சரிதான். வழக்கு கோவில்கள் 250 ஆண்டுகளாக வேட்டுவகவுண்டர்கள் வணங்கும் கிராம கோவில்களாக வாதி கோவில்கள் என்று நீங்கள் சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோவில்களில் நீங்கள் பூசாரி உரிமை உள்ளவர்கள் என்பதற்காக அரசாங்க ஆவணம் எதாவது உள்ளதா என்றால் இல்லை. செங்கலாபுரம், செங்கலாஅம்மன் என்கிற ஜெயங்கொண்டம்மன் என்பது வேட்டுவகவுண்டர் சமூகத்தின் குல தெய்வம் என்று நீங்கள் சொல்வது பொய் என்று சொன்னால் குலதெய்வம் என்பது உண்மை. வழக்கு கோவில்களின் நிர்வாகம் வேட்டுவகவுண்டரின் பரம்பரை தர்மகர்த்தாக்களிடமே இருந்து வருகிறது என்று நீங்கள் சொல்வது பொய் என்று சொன்னால் வேட்டுவக்கவுண்டர்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அவ்வாறு வேட்டுவக்கவுண்டர்கள் தான் நிர்வாகமாக இருந்து வந்ததற்கு ஆவணங்கள் அரசிடமிருந்து பெற்று ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் ஒப்படைக்கவில்லை. வேட்டுவகவுண்டர் சமூகத்தினர் பரம்பரையாக தர்மகர்த்தாக்களாகவும், பூசாரிகள்(பண்டாரங்கள்) ஆக இருந்து இரு கோவில்களுக்கும் பூஜை புனஷ்காரங்கள் 250 ஆண்டுகளுக்கு மேலாகசெய்து வருகிறார்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் உண்மை நாங்கள் தான் பூஜை செய்து வருகிறோம். கடந்த 2012 ஆம் ஆண்டு ஆனூரைச்சேர்ந்த கணேசன் பெருமாள் மூலம் திருப்பூர் வேலாம்பாளையத்தை சேர்ந்த திருப்பூர்

பஞ்சாயத்து யுனியன் முன்னால் சேர்மேன் கிருஷ்ணன் அதே முகவரியை சேர்ந்த சாமியப்பன் திருப்பூர் பூலுவப்பட்டியை சேர்ந்த செந்தில்நாதன், பல்லடம் கணேசா டெக்ஸ்டைல்ஸ் கணேசன், ஈரோடு அரச்சலூர் சேர்ந்த தேவசேனாபதி ஆகியோர்கள் சேர்ந்து பரம்பரை தர்மகர்த்தாக்களான உங்களையும், பரம்பரை பண்டாரங்களை அணுகி கோவில் சிதலமடைந்து இருப்பதால் அதனை புனர் அமைத்து தருவதாக கூறி கொங்கு வேளாளர் பயிரன் குலத்திற்கு ஆனூர் அம்மன் தான் குலதெய்வம் என்று கூறி மேற்சொன்ன நபர்கள் ஏற்கனவே சில ஊர்களில் உள்ள சிதிலமடைந்த கோவில்களை புனர்அமைத்து தரவதாக கூறி கோவிலை அவர்களுடைய செலவில் புனரமைத்து தருகிறோம் பரம்பரை தர்மகர்த்தாக்களாக நீங்களே கோவிலை நிர்வாகம் செய்து கொள்ளுங்கள் என்றும் அது போலவே பரம்பரை பூசாரிகள்(பண்டாரங்களை) கோவில் பூஜை புனஷ்காரங்களை செய்து கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்றும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றும் 20ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நீங்கள் பிரமாணவாக்குமூலம் செய்தள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆனூர் அம்மன் கோவிலை புனர்அமைப்பதற்காக அறநிலையத்துறை நடுவர் மன்றத்திற்கு உங்களையும் ஜெயராஜ் அவர்களையும் அழைத்து ஆனூர் அம்மனை புனர் அமைத்ததற்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து பெற்றனர் என்று நீங்கள் சொல்வது பொய் என்று சொன்னால் நீங்கள் சொல்வது பொய். 2012 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தாவா கோவில்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்த வாதிகளுக்கு எதிராக

சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் எடுக்கவில்லை. கேரளாவிலிருந்து பணிக்கரை அழைத்துவந்து பிரசன்னம் பார்க்கவேண்டும் என்று பிரசன்ன பார்த்துள்ளதில் 3 கொலைகள் நடந்துள்ளதாகவும் கோவில் கட்டுவதற்கு பிரசன்ன பார்க்கவேண்டும் என்றும் அந்த பணிக்கர் பரம்பரை தர்மகர்த்தாவான பரம்பரை பூசாரிகளான பண்டாரங்களை அமரவைத்து உங்கள் கையில் அரிசி கொடுத்த சத்தியம் வாங்கிக்கொண்டு பின்னர் கோவில் கட்ட அனுமதி கொடுத்தார்கள் என்று பொய் கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோவில்களுக்கு 48 நாட்கள் பரம்பரை பூசாரிகளான பண்டாரங்களும் பரம்பரை தர்மகர்த்தாக்களும் விழாவில் கலந்து கொண்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. வேட்டுவக்கவுண்டர்களுக்கு வழக்கு கோவில்களில் எவ்விதமான வழிபாடு உரிமையோ, நிர்வாக உரிமையோஇல்லாத போது கோவில் கும்பாபிஷேகம் முடிந்த பின்பு 48 நாட்களும் பரம்பரை பூசாரிகளும், பண்டாரங்களும் உங்கள் சமூகத்தை சேர்ந்த பரம்பரை தர்மகர்த்தாக்களும் சேர்ந்து கலந்துகொண்டார்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல நாங்கள் கலந்துகொண்டோம். கும்பாபிசேகம் முடிந்து 48 நாட்கள் கருவரை உட்பட பூசாரிகளான பண்டாரங்களாகிய உங்களால் செய்யப்பட்டது என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல பொய். பண்டாரம் பூசாரி வெவ்வேறு சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். நான் பண்டாரம் ஆவேன். நான் பூசாரி. கும்பாபிசேகம் முடிந்து 48 நாள் மண்டல பூஜைக்கு பின்பு பரம்பரை பூசாரிகள் கோவில் ஆகம

விதிப்படி கட்டுப்பட்டள்ளதால் பிராமணர்கள் தான் பூஜைகள் செய்யவேண்டும் என்றும் கோவில் பிரகாரத்திற்கு வெளியே உள்ள முனியப்பன் சாமிக்கு மட்டும் பரம்பரை பூசாரிகளான உங்களை பூஜை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது பொய் என்று சொன்னால் சரியல்ல உண்மை. 250 வருடங்கள் பரம்பரையாக பூஜை செய்து வருவதால் உங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது என்று பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல உண்மை. பூசாரிகளான உங்களை மிரட்டி கோவிலுக்குள் வரவேண்டாம் என்று நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல உண்மை. நீங்கள் சொல்வது போல் வழக்கு கோவில்களின் பயிரன் குலத்தை சார்ந்தவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் கிடையாது என்று சொன்னால் கோயிலின் ஆக்கிரமிப்பாளர்கள் எங்களுடைய உரிமை பறிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிலிருந்து கோவிலிலிருந்து வெளியேற்றப்பட்டதாக சொல்லும் நீங்கள் இன்று வரை அறநிலையத்துறை மூலமாக, காவல்துறை மூலமாகவோ, வருவாய்துறை மூலமாகவோ, நீதிமன்றத்தின் மூலமாகவோ நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. வழக்கு கோவில்களைத் தவிர வேறு எந்த கோவிலும் பயிரன் குலத்திற்கு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. செங்கலாபுரம் ஜெயங்கொண்டம்மன் திருக்கோவிலை நீங்களும் உங்களது பங்காளிகளும் பூஜை செய்து அந்த கோவிலானது வேட்டுவகவுண்டர்களின் குல தெய்வமாகவும் அவர்களின் நிர்வாகத்தில் இருப்பதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல பூசாரிகள் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். முதல்

வாதியான ஆனூர் அம்மன் கோவிலுக்கும் வழக்கை தாக்கல் செய்த பயிரன் குலத்தை சேர்ந்தவர்களுக்கும் 2014 ஆம் ஆண்டிலிருந்து எந்த தொடர்பும் இல்லை என்று நீங்கள் சொல்லியிருப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. தும்பிவாடி ஆனூர் அம்மன் கோவிலில் ஆனூர் அம்மன் தெய்வம் மட்டுமே உள்ளது என்றும் ஜெயங்கொண்டமனுக்கு விற்கிரகம் எதுவும் இல்லை என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 20 வது பிரதிவாதி கேட்டுகொண்டுதற்கிணங்க உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகள் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>**முடிவடையும் நேரம் : 6.30 P.M.**</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:06:58 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 07–ம் நாளன்று 20 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.71–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **பாலசுப்பிரமணியன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**விசாரணை ஆரம்பிக்கும் நேரம் : 6.30 P.M**

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். பி.வா.சா.71 ன் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.352 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தேதியிட்ட குத்தகை ஆவணத்தின் நகல் பி.வா.சா.ஆ.353 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18 முதல் 31, 33 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 53, 55 முதல் 64, 67 முதல் 72, 74 முதல் 100, 102 முதல் 107, 109, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றதத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. இந்த வழக்கில் உங்களை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று இ.ம.எண்.101/2026 என்ற மனுவில் இரண்டாம் மனுதாரராக இருந்து நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அந்த மனுவும் பிரமாணவாக்குமூலமும் இதுதான். அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் கோவில்களான ஆனுர் அம்மன், ஜெயங்கொண்டம்மன் ஆகியவற்றிற்கு நீங்கள் பரம்பரை தர்மகர்த்தா என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல நான் சொல்வது தான் உண்மை. வாதிகளுக்கு நீங்கள் தான் பரம்பரை தர்மகர்த்தா மற்றும் காரியதர்சி என்று கூறுவதற்கு இந்து சமய அறநிலையத்துறையின் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதிகோவில்களுக்கு 250 ஆண்டுகளுக்கு மேலாக வேட்டுவக்கவுண்டர்களுக்கு கிராம கோவில்களாக இருந்து வருகிறது என்பதும், செங்கலாபுரம் செங்கலாஅம்மன் என்கிற ஜெயங்கொண்டமன் வேட்டுவகவுண்டரின் சமூகத்திற்கு குலதெய்வம் என்பதும் மேற்சொன்ன இரண்டு கோவில்களின் நிர்வாகமும் வேட்டுவகவுண்டரின் பரம்பரை தர்மகர்த்தாக்களிடம் மட்டுமே இருந்து வருகிறது என்றும் மேற்சொன்ன இரண்டு கோவில்களும் பட்டியலில் இடப்படாத கோவில்கள் என்றும் அதனால் அறக்கட்டளை போன்ற எந்த ஆவணங்களும் இல்லை என்பதும் வேட்டுவக்கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள் பரம்பரை

தர்மகர்த்தாக்களாகவும், பூசாரிகள்(பண்டாரங்கள்) இரண்டு கோவில்களுக்கும் பூஜை புனஷ்காரங்கள் செய்து வருவதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. பண்டாரங்கள் பூசாரிகள் இருவரும் ஒரே சமூகத்தினர். தர்மகர்த்தா வேட்டுவக்கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 2012 ஆம் ஆண்டு ஆனூரைச்சேர்ந்த கணேசன் பெருமாள் மூலம் திருப்பூர் வேலாம்பாளையத்தை சேர்ந்த திருப்பூர் பஞ்சாயத்து யுனியன் முன்னால் சேர்மேன் கிருஷ்ணன் அதே முகவரியை சேர்ந்த சாமியப்பன் திருப்பூர் பூலுவப்பட்டியை சேர்ந்த செந்தில்நாதன், பல்லடம் கணேசா டெக்ஸ்டைல்ஸ் கணேசன், ஈரோடு அரச்சலூர் சேர்ந்த தேவசேனாபதி ஆகியோர்கள் சேர்ந்து பரம்பரை தர்மகர்த்தாக்களான உங்களையும், பரம்பரை பண்டாரங்களை அணுகி கோவில் சிதலமடைந்து இருப்பதால் அதனை புனர் அமைத்து தருவதாக கூறி கொங்கு வேளாளர் பயிரன் குலத்திற்கு ஆனூர் அம்மன் தான் குலதெய்வம் என்று கூறி மேற்சொன்ன நபர்கள் ஏற்கனவே சில ஊர்களில் உள்ள சிதிலமடைந்த கோவில்களை புனர்அமைத்து தருவதாக கூறி கோவிலை அவர்களுடைய செலவில் புனரமைத்து தருகிறோம் பரம்பரை தர்மகர்த்தாக்களாக நீங்களே கோவிலை நிர்வாகம் செய்து கொள்ளுங்கள் என்றும் அது போலவே பரம்பரை பூசாரிகள்(பண்டாரங்களை) கோவில் பூஜை புனஷ்காரங்களை செய்து

கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்றும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றும் 20 ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நீங்கள் பிரமாணவாக்குமூலம் செய்தள்ளீர்கள் என்று சொன்னால் பொய். கேரளாவிலிருந்து பணிக்கரை அழைத்துவந்து பிரசன்னம் பார்க்கவேண்டும் என்று பிரசன்ன பார்த்துள்ளதில் 3 கொலைகள் நடந்துள்ளதாகவும் கோவில் கட்டுவதற்கு பிரசன்ன பார்க்கவேண்டும் என்றும் அந்த பணிக்கர் பரம்பரை தர்மகர்த்தாவான பரம்பரை பூசாரிகளான பண்டாரங்களை அமரவைத்து உங்கள் கையில் அரிசி கொடுத்த சத்தியம் வாங்கிக்கொண்டு பின்னர் கோவில் கட்ட அனுமதி கொடுத்தார்கள் என்று பொய் கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோவில்களுக்கு 48 நாட்கள் பரம்பரை பூசாரிகளான பண்டாரங்களும் பரம்பரை தர்மகர்த்தாக்களும் விழாவில் கலந்து கொண்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. 2012 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தாவா கோவில்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்த வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை எனக்கு இதுநாள் வரை தெரியாது தற்சமயம் தான் தெரியும். வேட்டுவக்கவுண்டர்களுக்கு வழக்கு கோவில்களில் எவ்விதமான வழிபாடு உரிமையோ, நிர்வாக உரிமையோஇல்லாத போது கோவில் கும்பாபிஷேகம் முடிந்த பின்பு 48

நாட்களும் பரம்பரை பூசாரிகளும், பண்டாரங்களும் உங்கள் சமூகத்தை சேர்ந்த பரம்பரை தர்மகர்த்தாக்களும் சேர்ந்து கலந்துகொண்டார்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. கும்பாபிசேகம் முடிந்து 48 நாட்கள் கருவரை உட்பட பூசாரிகளான பண்டாரங்களால் செய்யப்பட்டது என்று சொல்வது பொய் சொன்னால் சரியல்ல அதான் உண்மை. 250 வருடங்கள் பரம்பரையாக பூஜை செய்து வருவதால் உங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது என்று பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல உண்மை. பூசாரிகளான உங்களை மிரட்டி கோவிலுக்குள் வரவேண்டாம் என்று நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் வழக்கு கோவில்களின் பயிரன் குலத்தை சார்ந்தவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல உண்மையான தர்மகர்த்தாக்கள் நாங்கள் தான். 2015 ஆம் ஆண்டிலிருந்து கோவிலிலிருந்து வெளியேற்றப்பட்டதாக சொல்லும் நீங்கள் இன்று வரை அறநிலையத்துறை மூலமாக, காவல்துறை மூலமாகவோ, வருவாய்துறை மூலமாகவோ, நீதிமன்றத்தின் மூலமாகவோ வழக்கு வாதிகளக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை எடுக்கக்கூடிய சக்தி இல்லை. பயிரன் குலத்தை

சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்றத்திற்கு தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வழக்குரை தாக்கல் செய்துள்ளவர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள், பணபலம் ஆள்பலம் உள்ளவர்கள், ரியல்எஸ்டேட் செய்பவர்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்ற சொன்னால் சரியல்ல அதான் உண்மை. வழக்கு கோவில்களைத் தவிர வேறு எந்த கோவிலும் பயிரன் குலத்திற்கு கிடையாது என்று சொன்னால் சரியல்ல வேறு கோவில் பக்கத்திலேயே உள்ளது. வேண்டுவக்கவுண்டர் குலதெய்வமான ஜெயங்கொண்டம்மனுக்கு பயிரன் குலத்தை சேர்ந்தவர்களை டிரஸ்டிக்களாக நியமணம் செய்து கொண்டு உங்களது கிராமக்கோவில்களை சதி செய்து கைப்பற்றிக்கொண்டார்கள் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல அதான் உண்மை. வழக்கு கோவில்களுக்கும் வழக்கு கோருரிமைக்கும், பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ள உங்களுக்கும் இ.ம.எண்.101/2026 மனுதாரர்களுக்கும் இந்த வழக்கில் வேட்டுவகவுண்டர் சமூதாயத்திற்கும் எந்தவொரு வழிபாட்டு உரிமையும் கிடையாதுஎ ன்று சொன்னால் எங்களுக்கு தான் முழுஉரிமை உள்ளது பயிரன் குலத்திற்கு எந்த உரிமையும் கிடையாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.353 நகலாக இருப்பதால் அதில் வாதி கோவில்களோ, வாதி கோவில்களின்

நிர்வாகத்தினரான பயிரன் குலத்தை சார்ந்தவர்களோ, இந்து சமயஅறநிலையத்தை சேர்ந்தவர்களோ தரப்பினர்களாக இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.353 குத்தகை ஆவணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 20வது பிரதிவாதி கேட்டுகொண்டுதற்கிணங்க உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லி அதனை அனுசரித்து பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>**விசாரணை முடிவடையும் நேரம் : 7.00 P.M.**</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:07:08 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.